Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (29 - 01 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 345

## வளைகுடா எண்ணெய்க் கசிவு இந்து சமுத்திரத்தை பாதிக்கும்

(றியட்)

வளைகுடாவில் பரவிவரும் எண்ணெயை மேலும் பரவவிட்டால் இந்துசமுத்திரப் பிராந்தியத்தையும் அது பாதிக்கும் என்று ஜப்பானிய சூழல் மாசடைதல் துறை சார்ந்த நிபுணர் கருத்து வெளியிட்டுள்ளார். சவுதி அரேபியாவிற்கு சென்று அங்குள்ள நிலைமை பற்றி ஆராய்ந்த அந்த நிபுணர் இந்த எண்ணெயை பெருக விட்டால் ஒருபுறம் ஈரானில் இருந்து இந்தியா வரையும் (4ஆம் பக்கம் பார்க்க)

### வலிகாமத்திலும் வடமராட்சியிலும் ----

# விமானக் குண்டு வீச்சு;

# 4பேர் பலி; பலர் படுகாயம்!

## கல்வி நிறுவனப், தொழிற்சாலை, வீடுகள் சேதம்

(நமது நிருபர்)

குடாநாட்டின் பல பகுதிகளில் சிறிலங்கா விமானப் படை நேற்று நிகழ்த்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் நான்கு பொது மக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர் தனியார் கல்வி நிறுவனம், கைத்தொழிற்சாலை, வீடுகள் என்பன பலத்த சேதமடைந்தன.

நேற்றைய விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நல்லூர் சட்டநாதர் கோயிலடி, இருபாலைச்சந்தி, கோண்டாவில், நீர்வேலி, உடுப்பிட்டி, ஊரிக்காடு ஆகிய ஆறு இடங்களில் ஏழு தடவைகள் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இந்தத் தாக்குதல்கள் சகலவற்றிலும் மூன்று விமானங்கள் ஈடுபட்டன.

நேற்றைய முதலாவது தாக்குதல் நண்பகல் 11.45 மணியளவில் நல்லூர் சட்டநாதர் கோவிலடியில் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலின்போது வீட்டினுள் நின்ற யோகேஸ்வரி பொன்னம்பலம் (வயது 35) ஸ்தலத்திலேயே பலியானார். ஞ. ஜெயந்தி (வயது 23). வ கோபாலபிள்ளை (வயது 35) சதீஸ்வரன் (வயது 22) ஆகியோர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலினால் நல்லூர் ப. நோ. கூ. சங்க கிளை

### விமானத் தாக்குதலினால் ஆண்டான்குளத்தில் ஒருவர் பலி

(மன்னார்)

மன்னாரில் உள்ள ஆண்

கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

### அதிகாரிகள் மீது கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற பின்னர் பாடசாலைக்கு வரத் தேவையில்லை என கல்விப்பணிப்பாளர் தெரிவித்த பின்னரும் பாடசாலைக்குச்சென்று சகல மாணவர்களுக்கும் கல்வி புகட்டிய ஆசிரியர்களுக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் நன்றி தெரிவிக்கிறது எனக் குறிப்பிட்ட அறிக்கை ஒன்றை இலங்கை தமிழர் ஆசிரியர்சங்க பொதுச் செயலாளர் த மகாசிவம் வெளியிட்டுள்ளார்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## 12 ஆம் நாள்

## வளைகுடா போர்

★ ஈராக் குடிமனைகள் மீது நேற்று அமெரிக்கப் படைகள் 200 தடவைக்கு மேல் தாக்குதல் நடத்தியதாக ஈராக் அறிவித்துள்ளது: பன்னிரெண்டு நிமிட இடைவெளியில் தொடர்ச்சியாக இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

★ ஈராக் மீது இதுவரை 20,000 முறை விமானத் தாக்குதலை நடத்தியதாக அமெரிக்காவினதும் அதன் கூட்டுப்படையினதும் தளபதி அறிவித்துள்ளார்.

★ 60 இஸ்ரேலிய விமானங்கள் அமெரிக்க தலைமையிலான நாடுகளின் வான்படையுடன் இணைந்துள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

★ வளைகுடா யுத்தத்தில் தமது பலம் மேலோங்கியுள்ளதாக பிரிட்டிஷ் யுத்தகால மந்திரிசபைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வான் தாக்குதல்களினால் ஈராக்கின் பலம் கட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டுவரும் காலம் நெருங்கியுள்ளதாகவும் இங்கிலாந்து அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

★ அமெரிக்க இராணுவ நிபுணர்களின் கருத்துப்படி ஈராக்கின் 65 வீதமான விமானத் தளங்கள் நல்ல நிலையில் உள்ளன. 12 நாட்கள் யுத்தத்தில் 8,000 விமான எதிர்ப்பு பீரங்கிகளும் 20 வீதமான எதிர்ப்பு ராடர் முறைகள் செயற்படுவதாகவும் இராணுவவட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. எனவே தரைத்தாக்குதலைத் தொடங்க ஒருவாரகால மாகலாம் என்று அமெரிக்க ராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது.

★ 69முதல்தர ஈராக் சண்டை விமானங்கள் ஈரானில் தரை இறங்கியுள்ளதாக இங்கிலாந்து இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் 7 ஈராக் விமானங்கள் தான் தரையிறங்கி நிற்பதாக ஈராக் தெரிவித்துள்ளது. ஈராக் விமானங்கள் தரையிறங்கியதில் ஏதோ மர்மம் இருப்பதாக இங்கிலாந்து இராணுவ வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்துள்ளன.

★ யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஈராக்கிய மக்களுக்கு ஈரான் உணவு அனுப்பி வைத்துள்ளதாக ஈரான் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. இதேவேளை ஈரான் வாகனங்களை அனுப்பவில்லை என்று ஈராக் மறுத்துள்ளது.

★ குவைத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் நிரப்பும் நிலையம் ஒன்றை அமெரிக்கா சார்புள்ள கூட்டுப்படைகள் அழித்துள்ளன.

மன்னாரில் உள்ள ஆண்டான்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த நான்கு குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டதில் ஒருவர் பலியாகியுள்ளார் இருவர் காயமடைந்துள்ளனர். பல

...ன.

நேற்று முன் தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் மன்னாரில் உள்ள ஆண்டான் குளம் பகுதியில் நான்கு குண்டுவீச்சு விமானங்கள் விமானத் தாக்குதலை மேற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

...லூர் ப. நோ. கூ. சங்க கிளை ஒன்றும் சேதமடைந்தது.

இருபாலை

இருபாலையில் இடம்பெற்ற விமானக்குண்டுத் தாக்குதலில் வீட்டுக்குள் மதிய உணவு சமைத்துக் கொண்டிருந்த வயோதிபமாது அ. நாகரத்தினம் (73 வயது) இடதுகையை இழந்தார். ஜெகதீஸ்வரி முருகேசு (38வயது) என்பவருக்கு காலில் காயமேற்பட்டது. பாண் வியாபாரம் செய்யும் செ. திருநாவுக்கரசு(43வயது), ஜெயராஜா (வயது 16) ஆகியோரும் காயமடைந்தனர். இவர்கள் நால்வரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

...வெளியிட்டுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஐப்பசி மாத ஓய்வூதியம்

இலங்கை வங்கியின் யாழ். பிரதான கிளையில் இன்று ஐப்பசி மாதத்திற்குரிய சிவில் மற்றும் புகையிரத, உள்ளூராட்சித் திணைக்கள ஓய்வூதியக்காரர்களுக்கான கொடுப்பனவுகள் காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை வழங்கப்பட உள்ளன.

மேலும் சகல திணைக்கள கூட்டுத்தாபன உயர் அதிகாரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய யோசனையுடன் கொழும்பு செல்கின்றேன்

## — மதுரையில் சுக்ளா

இலங்கைத் தமிழர் பிரச்சினையை புதியதோர் கண்ணோட்டத்தில் பரிசீலனை செய்வதற்கு பாரத அரசு அக்கறை கொண்டுள்ளதாக மத்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்ளா கூறியிருக்கிறார்.

கொழும்புக்கு வரும் வழியில் நேற்று மாலை மதுரையில் செய்தியாளர்களிடையே அவர் பேசினார்.

இலங்கை விடயத்தில் புதுடெல்கி சில புதிய யோசனைகளை வைத்திருப்பதாக அமைச்சர் கூறினார். இந்தப் புதிய யோசனைகளை குறித்துத் தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதியுடன் பேச்சு நடத்தி விட்டதாகவும் வி. சி. சுக்ளா தெரிவித்தார்.

இலங்கையில் காணும் பிரச்சினைகள்மற்றும் நடப்புகளை பற்றி அமைச்சர் குறிப்பிடும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முள்ளிக்குளம் பகுதியில் 5 தமிழர் வீடுகள் தகர்ப்பு

(மன்னார்)

இலவங்குளம் முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் முள்ளிக்குளம் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தியபோது ஐந்து தமிழர் வீடுகளை வெடிவைத்துத் தகர்த்துள்ளனர்.

கடந்த இருபதாந் திகதி புத்தளம் இலவங்குளம் முகாமில் இருந்து மன்னார் மாவட்டத்தில் முந்திரிக்குளப் பகுதியில் தேடுதல் வேட்டையை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினர் அப் பகுதியிலுள்ள ஐந்து வீடுகளை வெடிவைத்துத் தகர்த்துள்ளனர், நினைவுத்தூபி ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது. (மு)

# சுக்ளாவை ஹெரல்ட்ஹேரத் கட்டுநாயக்காவில் வரவேற்றார்

கொழும்பு வந்த இந்திய அமைச்சர் வி. சி. சுக்ளாவை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹெரல்ட்ஹேரத், சுற்றுலாத்துறை அமைச்சர் தொண்டமான், வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் வரவேற்றார்கள். இந்திய உயர் ஸ்தானிகர் ஜா தும் விமான நிலையத்தில் சமுகம் அளித்திருந்தார்.

இன்று காலை அமைச்சர் சுக்ளா வெளிவிவகார அமைச்சர் ஹெரல்ட் ஹேரத்தைச் சந்தித்து பேசவுள்ளார். இருதரப்பு உறவுகள்பற்றி முக்கியமாகப் பேசப்படும் என்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மீட்பு நிதி செலுத்துவதற்கு ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு

(நமது நிருபர்)

தமிழீழ மீட்பு நிதிக்கு பங்களிக்க விரும்பும் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த அனைவரும் பங்களிப்பதற்கு வசதியாக 8.2.91 ஞாயிற்றுக்கிழமை நிதி சேகரிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவு முடிவு செய்துள்ளது. இதில் பங்களிக்க விரும்புவோர் சிற்றூரவையினால் அவர்களுக்கென அறிவிக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

...துள்ளன. லேசர் ஏவுகணையின் மூலம் இந்த நிலையம் அழிக்கப்பட்டதாக கூட்டுப்படைகளின் தளபதி குறிப்பிட்டார். வளைகுடாவின் வடக்குக் கரையில் ஏற்பட்டுள்ள எண்ணெய்க் கசிவை தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். எண்ணெய் ஏற்றும் நிலையங்களோடு எண்ணெய் வயல்களை இணைக்கும் குழாய்கள் மீது எவ் 111 ஜெட் போர் விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். இந்த நடவடிக்கையின் பின்னர் நெருப்பு சற்றுக் குறைந்திருப்பதாகக் கடைசியாகக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

★ மணிலாவில் இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

★ அதென்சில் அமெரிக்கன் எக்ஸ்பிறஸ் வங்கி அலுவலகத்தில் ரொக்கற் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது பெரும் சேதத்தை ஏற்படுத்தி இருப்பதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

★ பாகிஸ்தான் செனற் சபை வளைகுடாப் பிரச்சினைக்கு சமாதானம் மூலம் தீர்வுகாணும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

★ இஸ்ரேல் மீது மீண்டும் ஏவுகணைத்தாக்குதல் நடத்தப்படலாம் என இஸ்ரேலிய வானொலி மக்களை எச்சரித்தது. ஈராக்கிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க இஸ்ரேல் தயாராக இருக்கிறது என்றும், ஆனால் இன்னும் சற்றுப் பொறுத்திருக்கப் போவதாகவும் இஸ்ரேலிய நிதி அமைச்சர் ஈப் சாக் மதோ நேற்றுக் கூறினார்.

★ குவைத்தில் உள்ள ஈராக்கிய காலாட்படையினருக்குப் பிரதான உணவுப்பொருள் விநியோக மார்க்கத்தை மேற்கு நாடுகளின் குண்டுவீச்சு விமானங்கள் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளதாகவும் இந்த வீரர்களுக்கு இரண்டு வாரங்களுக்குப் போதுமான உணவே கையிருப்பில் உள்ளதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

★ குவைத்தில் வெடிக்கும் சக்திவாய்ந்த திரவம் கொண்ட தாங்கிகளும், ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட சக்திவாய்ந்த தரைக்கண்ணிவெடிகளும் எண்ணெய்க் கிணறுகளுக்கு அருகில் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

★ தரைமார்க்கமாகத் தாக்குதலை ஆரம்பிப்பது தற்போது அவசியமில்லை எனவும், விமானத்தாக்குதல்கள் இதுவரை வெற்றிகரமாக அமைந்துள்ளதால் விமானத்தாக்குதலே தொடர்ந்தும் நடைபெறும் எனவும் அமெரிக்க அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

★ ஈராக் மக்கள் மீது அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் குண்டு வீசுவதற்கு அனுமதி வழங்கிய ஐ. நா. சபையின் செயலாளர் நாயகம் ஒரு கிரிமினல் குற்றவாளி என ஈராக் வெளிவிவகார அமைச்சர் தாரிக் அஸிஸ் தெரிவித்துள்ளார்.

★ வழக்கமாகப் பயன்படுத்தப்படாத கருவிகளையும் தான் இந்தப்போரில் பயன்படுத்தக்கூடும் என்று ஈராக் சாடை காட்டியுள்ளது.

## வரி விளம்பரம்

### போட்டோஸ்ரற்

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும் கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும் நாடுங்கள். சித்ராலயா: 351, கோயில் வீதி, நல்லூர் (கோயில் வீதியில் கம்பன் கோட்ட முன்பாக) (B/1941)

### தரணி ஸ்ருடியோ

நபர்களின், கலர் - கறுப்பு வெள்ளை - பாஸ்போட் அடையாள அட்டை, என்லாஜ்மென்ட் படங்கள், விளம்பர போட், பிளாஸ்ரிக் போட் மற்றும் ஓவிய வேலைகளுக்கு 24, யாழ் வீதி, (ரெட்ணா வீதி) யாழ்ப்பாணம். (B/1915)

### கிளீன்கட்

தமிழ். ஆங்கில ரைப்பிங், றோனியோ வேலைகளுக்கும், அடையாள அட்டைகளைக் களிட்டுக் கொள்வதற்கும், மற்றும் போட்டோஸ்ரற்பிரதிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கும்: கிளீன்கட், 239, மின்சாரநிலை வீதி, யாழ்ப்பாணம். B-1921)

## பயிற்றப்படாமல் 27,000 பட்டதாரி ஆசிரியர்கள்

(கண்டி)

இலங்கையில் 27,000 பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்றப்படாமல் ஆசிரியர் சேவையில் உள்ளனர். இவர்களுக்கு வார இறுதி நாட்களிலும், விடுமுறைகளிலும் பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. முதலில் பேராதனை பல்கலைக் கழக கல்வியியற் புலத்தில் பயிற்றப்படாத பட்டதாரி ஆசிரியர்களுக்கான வார இறுதி பட்டப் பின்படிப்பு கல்வியியல் டிப்ளோமா வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### ஈராண்டுப் பகுதி நேரக் கல்விப் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறி 1990\91

பட்டம் பெற்றபின் மூன்றாண்டுகால ஆசிரியர் சேவை அனுபவமுடைய அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேர்வு நாடிகள் 28 02 1991 இல் 50 வயதுக்குள் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் நிதிக் கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக் கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

தெரிவு செய்யப்படுவோர் 25 மைல் சுற்றாடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 21 04. 1991 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை

---

## யாழ். மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கம்

யாழ். மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் 29-01-91 மாலை 6 மணிக்கு நிழல் நிர்வாகத்தில் (யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன்பாக) கூடுமாறு வேண்டுகின்றேன்.

இப்படிக்கு
செயலாளர்

(R-1058)

---

## பழைய சைக்கிள் பார் தேவை

உபயோகித்த பழைய சைக்கில் பார் கொள்வனவு செய்யப்படும். சைக்கில் பார்கள் வைத்திருப்பவர்கள் 207, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(B- 1945)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

அமரர்

### திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம்

(இளைப்பாறிய தபாலதிபர், காங்கேசன்துறை)

தோற்றம்: 29-0-928 மறைவு 30-12-1990

கடந்த 30 12-1990 இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 29-01-91 இன்று காலை 10 மணியளவில் மூளாய் வைத்தியசாலைக்கு அருகில் நடைபெறும். பின்பு 33, மெல்போன் அவென்யூ, பம்பலப்பிட்டியில் உள்ள எமது இல்லத்தில் சபிண்டீகரண கிரியைகளும் ஆத்மசாந்தி பூஜையும் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இவரின் துயரச்செய்தி கேட்டு தபால்மூலம், நேரில் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும். பல உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது குடும்பத் தலைவரின் ஆன்மா சாந்தியடைவதாக!

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்)
மக்கள், மருமகன், பேரன்.

'திருப்தி'
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

(R- 1055)

---

## பயிற்சி ஆசிரியர்களுக்கும் சம்பள உயர்வு

(கொழும்பு)

பயிற்சி ஆசிரியர்களுக்கும் கடந்த நவம்பர் மாதத்திலிருந்து சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது இந்த வேளை பயிலுனர் ஆசிரியர் எண்ணிக்கை 25,000 லிருந்து 35,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது நான்கு வருடப் பயிற்சியின் பின் இவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் அரசாங்கத்தின் நியமனம் கிடைத்ததும் மொத்தம் ரூ 1,300 சம்பளப் படியாகப் பெறவுள்ளார்கள்.

---

## இடமாற்றம்

கலாஜோதி புத்தக நிலையம், தெல்லிப்பளை, தற்பொழுது பிரதான வீதி, சங்கானையில் இயங்கி வருகிறது.

பாடசாலைப் புத்தகங்கள், காகிதாதிகள், உபகரணங்கள், அன்பளிப்புப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், பெண்களுக்கான அலங்காரப் பொருள்கள், உள்ளாடைகள், காலணிகள், பிறந்ததின - கல்யாண வாழ்த்துக்கள் முதலியன குறைந்த விலையில் பெற சிறந்த இடம்.

(R-1059)

---

## ராஜா காமென்ற்ஸ்

★ ராஜா காமென்ற்ஸ் ஸ்தாபனத்தாரின் நம்பிக்கைத் திறன்கூடிய தரமான றெடிமேட் ஆடைத்தினுசுகள் இன்றைய நவநாகரீக முறைகளில்

❋ ஆடவர் ❋ நங்கையர் ❋ மழலைகள்

★ அனைவரினதும் தேவைக்குகந்த வகையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு)

விபரங்களுக்கு:

**யோகாஸ் புடைவை மாளிகை**
இல, 16, பெரியகடை.

**குமார் புடைவை மாளிகை**
முத்திரைச்சந்தி, நல்லூர்.

(B-1785)

---

## நினைவு கூருகின்றோம்!

வகுப்புகள் ஆரம்பமாகின்றது;

## வளைகுடாவில்

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பங்களாதேஷ்**

2000 துருப்புக்களைச் சவூதிக்கு அனுப்பியுள்ளது. மேலும் 3,000 துருப்புக்கள் அனுப்பப்படவுள்ளன.

**பல்கேரியா**

276 பேரை அனுப்புவதாக அறிவித்துள்ளது. இவர்களில் 110 பேரைக் கொண்ட இரசாயன வாயுப் பாதுகாப்புப் பிரிவும், மருத்துவப் பிரிவைக் கொண்ட 703 பேரும் அடங்குவர்.

**செக்கோஸ்லவாக்கியா**

சவூதிக்கு இரசாயன வாயு எதிர் நடவடிக்கைப் பிரிவைச் சேர்ந்த 200 பேரை அனுப்பி வைத்துள்ளது.

**நியூசிலாந்து**

ஹெர்குலிஸ் போக்குவரத்து விமானங்கள் இரண்டும், 46 பேரும்.

**நைகர்**

சவூதிக்கு 500 துருப்புக்களை அனுப்பியுள்ளது.

**பாகிஸ்தான்**

சவூதிக்கு 5,000 பேரைக் கொண்ட காலாற்படை அணி ஒன்றையும், 6,600 பேர் அடங்கிய கவசப் பிரிவையும் அனுப்பியுள்ளது. கவசப் படைக்கலன்கள் சவூதியினால் வழங்கப்படும்.

**போலந்து**

இரு மருத்துவக் கப்பல்களையும், மருத்துவப் பிரிவொன்றையும் சவூதிக்கு உதவியுள்ளது.

**செனிகல்**

500 துருப்புக்கள் மாத்திரம்.

---

பல்கலைக்கழகத்தில் ... பெறும்

விண்ணப்பங்களை உங்கள் பாடசாலை அதிபர் ஊடாக, சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 28.02.1991 ஆம் திகதிக்கு முன்பு அனுப்புதல் வேண்டும்.

—பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்
24-01-91 (B-1944)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**முழுநேரக் கல்விப் பட்டப் பின் டிப்ளோமா கற்கை நெறி**

**1989 / 90 விரிவுரைகள் ஆரம்பம்**

அரசாங்கப் பாடசாலைகளிலும் தனியார் பாடசாலைகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கான மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கான விரிவுரைகள் 1991. 02. 11 ஆம் திகதி ஆரம்பமாகும்.

அரசாங்க பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும் 1991 02 11 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்து விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவாளர்,
யாழ் பல்கலைக்கழகம்
24 02 91 (B/19 3)

---

காங்கேசன்துறை; (R-1055)

---

# 180 ஆம் நாள் நினைவஞ்சலி



கோண்டாவிலில் மலராய்
**09 - 01 - 1970**

யா/கோட்டையில் வரலாறாய்
**05 - 08 - 1990**

வீரவேங்கை
கப்டன்
## கண்ணன்
(கண்ணாடி)

## அருட்செல்வன் - கோண்டாவில்

இனவாத அரசழிக்க இறுமாப்பாய் சென்றவனே
கோட்டையினில் கொடியேற்றக் கொடும்புலியாய்
சென்றவனே
உன்னுயிரைக் கோட்டைவிட்டு எம்முயிரைக் காத்தவனையே
உன்னுயிரைக் கோட்டைவிட்டு கோட்டையெல்லாம்
நோட்டமிட்டு
வீட்டை விட்டு விலகாமல் விழிநீரில் வாடுகின்றோம்
எம்மனக் கோட்டைவிட்டு விலகாமல் என்றென்றும்
நீயிருப்பாய்.

கண்ணே நீ கொண்ட வீர ஆவேசமும் நீ ஆற்றிய
வீர சாகசமும் கேட்டு இறும்பூதெய்தினோமடா
தம்பி அருட்செல்வா! உன் கனவு நனவாகும் நாள்
நெருங்கிவிட்டது. வெல்க தமிழீழம்! அடைக நீ மனச்சாந்தி!

நந்தாவில் அம்மன் வீதி,
கோண்டாவில்.

தாய் தந்தை சகோதரர்கள்,
மைத்துனர் மருமகன்

(R-1057)

---

# ஜனவரி 29

1986 ஆம் ஆண்டு மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

## லெப். உமாகாந்த்

(பெநிக்லஸ் - வட்டக்கண்டல்)

இதே தினத்தில் வீரமரணமடைந்த

**ஆசீர்வாதம் அருளப்பு** (மூதூர்)

1987 ஆம் ஆண்டு விபத்தில் எமைப் பிரிந்த

**பவுண்** (மா. குணசிங்கம் - நாவலடி, உடுப்பிட்டி)

ஆகியோரை இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

தமிழீழப் பூக்கள் உதிர்ந்து
பல ஆண்டு சென்றாலும்
பல மக்கள் மனதிலே நிலைத்து
வாழ்கின்றீர்கள் மாவீரர்களாய்!
வீரத்தாயின் மடியிலே முளைத்து விட்ட
தாயகத்தின் மடியிலே மாவீரரென
— வாழ்ந்திட்ட
விடுதலைக்காய் வித்திட்ட
விடுதலைப் புலிகள் என எழுந்திட்ட
விண்ணெலாம் விளங்கிவிட்ட மாவீரர்களே
மண்ணதின் மீட்பிலே
மண்வாசனை கொண்ட நீங்கள்
சத்திய சமரினில் சரித்திரம் படைத்த
— மாவீரர்களே
சத்தியமாய் நிலைத்து வாழ்கின்றீர்கள்
நித்தியமாய் ஈழத்தில் வாழ்கின்றீர்கள்.

★ ஆசீர்வாதம் அருளப்பு, ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் வீரமரணமடைந்தவராவார்.

: **விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B-1897)

★ சிந்தனைக்கு ★

தொழுது ஊண் சுவையின் உழுது
ஊண் இனிது.

— ஔவையார்

# ஈழநாதம்

31, மகேந்திராவீதி யாழ்ப்பாணம். 29-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த பெ எண் 05

## பழக்கங்கள் எவையும் கூடப் பிறப்பவையல்ல

"ஆறு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் அரசாங்கத்தின் கையிருப்பில் உள்ளன. எனவே வளைகுடா யுத்தம் எம்மைப் பாதிக்காது. எந்தவொரு பொருளும் அதிக விலையில் விற்க அனுமதிக்கப்படமாட்டாது தனியார் இறக்குமதி செய்யும் அரிசியைக்கூட அரசு நிர்ணயிக்கும் விலையிலேயே வியாபாரிகள் விற்கவேண்டும்." இவ்வாறு சிறிலங்கா உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் மல்லிமாராச்சி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்

அதேவேளை, யாழ் நகரப் பகுதியில் நடுங்கும் குளிரில் அடுத்தநாள் நிவாரணமாக விநியோகிக்கப்படவுள்ள அரிசியைப் பெற முதல்நாள் இரவு ஒன்பது மணியிலிருந்து கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் முன்னால் மக்கள் அலைமோதுகின்றனர் அத்தோடு வர்த்தக நிலையங்கள் முன்பும், அரிசி ஆலைகள் முன்பும் மக்கள் தமது ஏனைய வேலைகளையும் விட்டு நீண்ட வரிசையில் காத்துக் கிடக்கின்றார்கள் அத்தியாவசியப் பொருள்களுக்காக.

இவ்வாறானதொரு நிலை தமிழ் மக்களுக்கு இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில்கூட ஏற்படவில்லை என பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன

இந்தப் பற்றாக்குறையும் பஞ்சமும் தமிழ் மக்கள்மீது சிறிலங்கா ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்டவையாகும். இலங்கையில் போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன தமது உரிமையைக் கேட்டார்கள் என்பதற்காக அதிகாரம் உள்ளவர்கள் தமிழருக்கு உணவு வருவதைத் தடை செய்துவிட்டார்கள் அதாவது தமிழரின் உரிமையற்ற நிலையால் தமிழரின் உணவை சிங்களவர் தீர்மானிக்கின்றனர்.

இந்த நிலையானது இன்றுடன் முடிந்து விடப் போவதில்லை. தமிழர் இலங்கையில் தமது உரிமையை நிலை நிறுத்தும் வரை தொடர்ந்து நீடிக்கப் போவதொன்றாகும். இராணுவ ரீதியாக சிறிலங்கா அரசாங்கம் தோல்விகளைச் சந்திக்க, சந்திக்க உணவை தனது ஆயுதமாகப் பாவிப்பது தொடர்ந்துகொண்டே இருக்கும். ஏனெனில் இதைத் தவிர சிறிலங்கா அரசாங்கத்திடம் எதுவும் இல்லை.

# வட இந்தியாவை தாஜா பண்ண தெற்கை அவமதிக்கும் பிரேமா

இந்தியாவுடன் இலங்கைக்கு நீண்ட மத, கலாசார, பாரம்பரிய வரலாற்றுத் தொடர்புகளும் உறவுகளும் உண்டு. தென்னிந்தியாவிலுள்ள சில தீய சக்திகளின் செயல்களினால், இலங்கை-இந்திய உறவு சற்று சீர்குலைந்தது. நாம் இந்தியாவுடன் நல்லுறவை மீண்டும் புனருத்தாரணம் செய்ய வேண்டும். தமிழ் தீவிரவாதிகளுக்கு ஆயுதம் வழங்கும் அந்தத் தீய சக்திகள் விரைவில் அழிந்து போய் விடுவார்கள் என்று கடந்த வெள்ளிக்கிழமை இந்தியத் தூதுவர் எம். என். ஜா அவர்கள் முன்னிலையில், றோட்டரிக்கழக விழாவிற் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சிங்கள-பௌத்த ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா குறிப்பிட்டார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்லா இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் இத்தருணத்தில் பிரேமதாஸா மேற்கண்டவாறு குறிப்பிட்டமை [illegible] கபடமும், அரசியல் உள்நோக்கமும் கொண்ட ஓர் அறிவிப்பே ஆகும்.

தென்னிந்தியாவைக் குறை கூறி, வடஇந்தியாவைத் தாஜா பண்ணும் உள்நோக்கம் கொண்ட செயல் இது. தமிழருக்கு எதிராக இந்திய, மத்திய அரசை தம் பக்கம் இழுக்கும் இனவாதக் கண்ணோட்டம் மிக்கது இந்த அறிவிப்பு. இது ஒரு பிரித்தாளும் இராஜதந்திரம். இந்திய மத்திய அரசு பிரேமாவின் தாஜா பண்ணலுக்கு எடுபட்டு விடுமோ?

பிரேமதாஸா இங்கு தென்னிந்தியா என்று குறிப்பிட்டது தமிழகத்தையே. அவர் "தீய சக்திகள்" என்று குறிப்பிட்டது தமிழ் மக்களையும், தமிழக அரசையுமே. தமிழக மக்களையும், தமிழக அரசையும் புண்படுத்தக் கூடிய பிரே

வின் மேற்படி அறிவிப்பானது சுக்லாவை பிரேமா எப்படி தாஜா பண்ணப் போகிறார் என்பதை முன்கூட்டியே அறிவித்து விட்டது.

இந்தியாவை ஏமாற்றுவதில் இலங்கை அரசு கடந்த காலத்தில் வெற்றி கண்டுள்ளது. ஏமாற்றுகரமான இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் நன்றாகவே ஏமாற்றி தோற்கடித்து விட்டது. தற்போது மத்திய அரசை ஏமாற்றப் புதிய வழிகளை பிரேமா நாடுகிறார். தொடர்ந்தும் மத்திய அரசு இலங்கையின் இராஜதந்திரத்திற்குப் பலியாகுமா?

1945ஆம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழுவினர் இலங்கைக்கு வந்த போது அவர்களை மந்திரிசபை சந்திப்பதில்லை என முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அப்போது சிங்கள தலைவர்களுக்குத் தலைமை தாங்கியவரும், காணி, விவசாய அமைச்சராக இருந்தவருமான டி. எஸ். சேனநாயக்கா தான் தனிப்பட்ட முறையில் சோல்பரி

**சாரணன்**

குழுவினரைச் சந்திப்பதாகக் கூறி பெருவிருந்துபசாரம் செய்து சோல்பரியை எல்லா வகையிலும் தாஜா பண்ணினார் அதன் விளைவு தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் அமைப்புத் திட்டத்தை சோல்பரி உருவாக்க வைத்தது.

டி. எஸ். சேனநாயக்காவின் மீதிருந்த நம்பிக்கையினால் தமிழ் மக்களின் உரிமை பற்றி நான் சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை, என்றும் ஆனால் நடைமுறையில் தனக்கு ஏமாற்றம் அளிக்கக்கூடிய வகையில் பிற்காலத்தில் தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியாளர்களால் பாதிக்கப் பட்டு விட்டார்கள் எனவும்,

ளவை என்று கூறி வட இந்தியர்களுக்கும், சிங்களவர்களுக்குமிடையில் தொடர்பு இருப்பதாக 1983 ஆம் ஆண்டு ஓர் முடிச்சுப் போட முற்பட்டார் ஜே ஆரின் அமைச்சரவை சகா. அவ்வாறு இலங்கை அரசால் வர்ணிக்கப்பட்ட இந்திராகாந்தியின் கொலைக்கு இலங்கை அரசே ஓர் முக்கிய காரணமென்பது இந்திய உயர்மட்ட ஆட்சியாளர்களுக்குத் தெரிய முடிந்ததே.

ஜே ஆர் அரசாங்கத்திற்கெதிரான ஓர் இராணுவ நடவடிக்கையின் மூலம் இலங்கையின் இனப் பிரச்சனைக்கு குறைந்தபட்ச சாத்திய அடிப்படையிலான தீர்வை ஏற்படுத்த 1984 ஆம் ஆண்டின் மத்திய பகுதியில் இந்திராகாந்தி முற்பட்டார். அதற்கான இந்திய இராணுவ நிர்வாகத் தயாரிப்பிற்கு ஆறுமாதகால அவகாசத்தை இராணுவத் தலைமைப் பீடம் கோரியதால் தான் அத்திட்டத்தை 84 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவேற்றுவதாக தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பின்னணியில் தான் அக்டோபர் மாதம் இந்திரா கொலைசெய்யப்பட்டார். இந்திராவின் கொலை சம்பந்தமான விசாரணை அறிக்கை இன்னும் இரகசியமாக உள்ளது இந்திராவின் கொலைக்குப் பின்னால் வெளிநாட்டுச் சக்திகள் உள்ளன. என்று அறிக்கையின் சில வசனங்களை இந்திய அரசு பொதுப்படையாக வெளிப்படுத்தியுள்ள போதிலும் அதன் உண்மை விபரங்களை வெளியிடவில்லை.

எம்மை அச்சுறுத்தும் சக்தி இன்னும் சில மாதங்களில் வீழ்ந்துவிடும் என இந்திராவின் கொலைக்கு சில மாதங்களுக்கு முன்பு முறையே ஜே. ஆரும் லலித் அத்துலத் முதலியும் கூறியிருந்தனர். இந்திராவின் கொலைக்கு, ஓர் வல்

எதுவும் இல்லை.

இந்த நிலையில் தமிழர் தமது உணவை தாமே தேடிக்கொள்ள வேண்டிய அவசியமேற்படுகிறது. இதற்கு உணவுப் பொருள்களை இயன்ற வரையில் உற்பத்தி செய்தலையும் இன்று நடைமுறையில் உள்ள உணவு வகைகளையும், பழக்கவழக்கங்களையும் மாற்றிக் கொள்ளுதலையும் விட வேறு வழியில்லை.

இன்று பெரியளவு உணவு உற்பத்தியில் ஈடுபடுவதற்கு போதுமான மூலவளங்கள் இல்லை. மூலவளங்கள் மட்டுப்படுத்தப் பட்டவையாக இருப்பதனால் உணவு உற்பத்தியில் பல தடங்கல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். ஆனால் தமிழ் மக்கள் தம்மால் இயன்றளவு முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்; ஒவ்வொரு குடிமகனும் தன்னிடம் உள்ள மூலவளத்தையும் உற்பத்திக்காக உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும்.

அதேவேளை பழக்கப்பட்ட உணவுப் பொருள்களில் இருந்தும் வேறு பொருள்களுக்கு மாறுதல் வேண்டும். அரிசியில் இருந்தும் கோதுமையில் இருந்தும் மாற முடியாது என்பது பிழையானதொரு தத்துவமாகும். எடுத்துக்காட்டாக கோதுமை எமக்கு எப்பொழுது அறிமுகமாகியது? இரண்டாம் உலகமகா யுத்தத்துடன் ஏற்பட்ட பற்றாக்குறையுடனேயே கோதுமை முதன் முதலாக தானியமாக அறிமுகமாக்கப்பட்டது. அப்பொழுது மக்கள் அதனை பெருமளவில் உண்ண முன்வரவில்லை. கோதுமை மா முதலில் ஒட்டுவதற்கே பசையாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதுவும் பாடைகள் ஒட்டுவதற்கு பயன்பட்டது. இதனால் பாடைமா' எனவும் அழைக்கப்பட்டது.

ஆனால் காலப்போக்கில் உணவில் கோதுமைமா பிரிக்க முடியாத இடத்தைப் பெற்றுவிட்டது. அதேவேளை அன்று உணவுப்பொருள்களில் முக்கிய இடத்தைப்பிடித்திருந்த சிறு தானிய வகைகள், பனம் பொருள்கள் இன்று மக்களுக்கு பழக்கப்படுத்தப்பட வேண்டிய பொருள்கள் ஆகிவிட்டன. இதேபோன்றதொரு நிலையை தேநீர் உடையதும். தமது வியாபாரத்திற்காக தேயிலை எமக்கு அந்நியரால் அறிமுகமாக்கப்பட்டது. தேயிலைப் பழக்கம் ஏற்படவேண்டும் என்பதற்காக தேயிலை மக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

ஆகையினால் உணவுப் பொருள்களில் பழக்கத்தை மாற்றுதல் என்பது இயலாத காரியமல்ல. ஆனால் அப்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

இரண்டாம் உலகமகாயுத்தத்தின் போது இருந்த நிலைமை இன்று இல்லை. மக்கள் தொகை அப்போதைய நிலையைவிட இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரித்துவிட்டது. இந்நிலையில் தேவையும் அதிகரித்து விட்டது. ஆகையினால் முன்னர் போல அல்லாமல் உற்பத்தியில் சகலரும் பங்குபற்ற வேண்டும். அப்பொழுதான் எமது தேவையை நாம் பூர்த்திசெய்வதோடு அந்நிய சக்திகளின் முயற்சிகளையும் முறியடிக்க முடியும்.

யும் புண்படுத்தக் கூடிய வகை மதாஸாவின் மேற்படி பொறுப்பற்ற கண்டனத்தை பார்த்துக்கொண்டு இன்று இந்திய அரசு கண்டிக்காமல் இருப்பது தவறு.

தமிழக மக்களின் மனதைப் புண்படுத்தக் கூடியதும் இனவாதக் கண்ணோட்டம் நிறைந்ததுமான பிரேமாவின் கண்டனத்தை வாபஸ் வாங்க வைக்குமாறு மத்திய அரசை தமிழக அரசு இதுவரை கோராதிருப்பதும் வருந்தத் தக்க ஒரு விடயமாகும்.

''யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே'' என்பதற்கிணங்க பிரேமா

தனது தவறுக்கு பாவமன்னிப்பு கோரும் வகையில் சோல்பரி 1963 ஆம் ஆண்டு பீ. எச். பாமர் எழுதிய நூலுக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சோல்பரியை ஏமாற்றியதில் வெற்றி கண்டவர்கள் சிங்களத் தலைவர்கள். ஏமாற்றுவதில் கைதேர்ந்த பாரம்பரியத்தைக் கொண்டவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள். இந்திராவிற்கும், ஏனைய ஆட்சியாளர்களுக்கும் இதை ஞாபகப்படுத்துவது நலம்.

இந்திராகாந்தியின் மூக்கும், ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மூக்கும் ஒரே மாதிரியா

ரகுடன் இணைந்து முன் கூட்டியே இலங்கை அறிந்திருந்தது. அல்லது திட்டமிட்டிருந்தது.

எனவே இப்படி மூக்குக்கு ஒற்றுமை சொல்லி கழுத்தை அறுத்த இலங்கை அரசை தொடர்ந்தும் இந்திய ஆட்சியாளர்கள் நம்பி ஏமாறப் போகிறார்களா?

இந்திய ஆட்சியாளர் தமிழருக்கு பாதகமற்ற முறையில் செயற்பட வேண்டும். தொடர்ந்தும் தமிழ் மக்களுக்குப் பாதகமான முறையில், சிங்கள ஆட்சியாளர்களினால் ஏமாற்றப் படுவார்களேயானால் அது இந்தியாவிற்குப் பாதகமாக அமைந்து விடும்.

# வளைகுடாவில் அமெ. அணியினதும் ஈராக்கினதும் படைப்பலம்

(நேற்றைய தொடர்ச்சி)

## வளைகுடா நாடுகளும் அரபு நட்பு நாடுகளும்

### சவூதி அரேபியா

மொத்தப் படை பலம் 118.000 இந்த எண்ணிக்கையில் உள்ள படைப் பிரிவுகள் வருமாறு: தரைப் படைகள் 38.000 தேசிய காவற் படை 56.000, கடற்படை 7,200 வான்படை 16.500 இத்துடன் 500 தாங்கிகளும் 180 சண்டை விமானங்களும் 8 போர்க் கப்பல்களும் சவூதியின் இராணுவ பலமென்று கணிக்கப்பட்டன.

### எகிப்து

அமெரிக்காவுக்கு அடுத்ததாக வளைகுடாவில் அதிக ஆளணி உள்ள வெளிநாட்டு சக்தி எகிப்தாகும். எகிப்து 40,000 துருப்புகளை சவூதியில் வைத்துள்ளது. 5000 எகிப்திய துருப்புகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலும் உள்ளன. தாங்கிகளும் ஏவுகணைகளும் எகிப்தின் வசமுண்டு

### ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

காலாட்படை 40.000 வான் படை 1 500, கடற்படை 1.500, 200 தாங்கிகள், 80 சண்டை விமானங்கள்.

### ஓமான்

25.000 துருப்புகள், சீவ்ரன்ஸ் ஸ்கோர்பியன் எம்-660 ரகத் தாங்கிகளும் ஓமான் படைகள் வசமுண்டு. 633 சண்டை விமானங்களும் ...ந்த எக்ஸோசெட் இணைக்கப்பட்ட ஏவுகணைப் படகுகள்,

### சிரியா

வளைகுடாவிற்கு 15 000 படைகளையும் 300 தாங்கிகளையும் அனுப்புவதாக உறுதியளித்திருந்தது. இதுவரை சிரியா 3,000 துருப்புகளைச் சவூதிக்கும் 1 000 துருப்புகளை ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் அனுப்பி வைத்துள்ளதாக வளைகுடா ராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

### மொறக்கோ

5,000 காலாட் படைகளையும், இலகு வாகனங்களையும் அனுப்பியுள்ளது. இதில் 3 500 ஐக்கிய அரபு எமிரேட்ஸிலும் 1.500 சவூதியிலும் நிலை கொண்டுள்ளன.

### அவுஸ்திரேலியா

ஒரு ஏவுகணை நாசகாரிக் கப்பல் ஆண்களும் பெண்களுமாக 600 படைகளைக் கொண்ட விநியோகக் கப்பல் ஒன்று.

(2ஆம் பக்கம் பார்க்க)

# சாலை மறியல் போராட்டம் வெற்றி; கருணாநிதி பதவி விலகவேண்டும்

**- மூப்பனார்**

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் அ. இ யு. அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் நேற்று நடத்திய சாலை மறியல் போராட்டம் அமைதியாகவே நடைபெற்றதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

நேற்றுமாலை 6 மணியுடன் இந்தப் போராட்டம் முடிவடைந்ததாக இந்த மறியல் போராட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் அறிவித்திருந்தார்கள். இருந்தாலும் அரசுக்குச் சொந்தமான பல்வேறு போக்குவரத்துக் கழகங்களின் பஸ்கள் இன்று காலை ஆறு மணிமுதல் ஓடத்தொடங்கும்.

சுமார் 12 எம். பிக்களும், பல எம். எல்.ஏக்களும் இந்த மறியல் தொடர்பாகக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சாலை மறியல் போராட்டம் காரணமாகப் பழனியில் சிக்கித் தவிக்கும் சுமார் ஒரு இலட்சம் யாத்திரிகர்களுக்கு தமிழக அரசு போக்குவரத்து ஒழுங்குகளையும் செய்துள்ளது.

பொதுவாக அமைதியாக நடந்துள்ள இந்தப் போராட்டத்தில் 1000பேர்கள் மட்டுமே கைது செய்யப்பட்டதாக மாநில உள்துறை செயலாளர் நாகராஜன் கூறியுள்ளார்.

மதுரையில் நேற்று கலைஞர் மு. கருணாநிதிக்குக் கறுப்புக் கொடி காட்டியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**ஜெயலலிதா**

அதேவேளை சாலை மறியல் போராட்டம் பெரும் வெற்றி அளித்துள்ளதாக தெரிவித்துள்ள அ. இ. மு. க தலைவி செல்வி ஜெயலலிதா சாலைமறியல் போராட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சகலரும் உடன் விடுதலை செய்யப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளதோடு, கைது செய்யப்பட்ட சில அ. இ. மு. க தொண்டர்கள் மீது சாட்டப்பட்டுள்ள கொலைக் குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டு உடன் விடுதலை செய்யப்படவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த சாலை மறிப்புப் போராட்டம் தொடர்பாக கருத்து வெளியிட்ட தமிழக எதிர்க்கட்சித் தலைவர் மூப்பனார் சாலை மறியல் போராட்டம் பெரும் வெற்றி அளித்துள்ளதால், கருணாநிதி அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார், மேலும் சாலைமறியல் போராட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அனைவரும் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்எனவும் தெரிவித்துள்ளார்

## பெற்றோர் தடுத்ததால் மகன் தற்கொலை

(செ. க. மை)

கொழும்பில் ஈ பீ டி பியின் கடும் தாக்குதலுக்குள்ளான பேராதனைப் பல்கலைக்கழக மாணவனான செல்வன் சக்திபாலன் (வயது 21) என்பவர் விரக்தியுற்று தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேரப்போவதாக பெற்றோரிடம் அனுமதி கேட்டதாகவும், அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவே கிணற்றுள்குதித்து தற்கொலை செய்ததாகவும் கூறப்படுகிறது. இச்சம்பவம் கடந்த 24ஆம் திகதி இடம்பெற்றது. இவர் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்தவர்.

## எம். எல். ஏ. சுட்டுக் கொலை

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஜனதாதள் எஸ் கட்சியைச் சேர்ந்த எம் எல் ஏ. பூபாலசிங் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் கடந்த மாதம் நோய்வாய்ப்பட்டு அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வளைகுடா சமாதானத்திற்கு ஈரானின் ஐந்து யோசனைகள்

(தெஹ்றான்)

வளைகுடாப்போரை முடிவிற்குக் கொண்டுவர ஐந்து அம்சங்கள் அடங்கிய ஓர் யோசனையை ஈரான் நேற்று முன்தினம் வெளியிட்டது.

ஈரானின்யோசனையில் அடங்கிய ஐந்து அம்சங்களும் வருமாறு;


உடனடியாகப் போர்நிறுத்

அந்த சகல வெளிநாட்டுத் துருப்புகளும் வெளியேற்றப்படவேண்டும்.

குவைத்திலிருந்து ஈராக் தனது படைகளை வெளியேற்றவேண்டும்.

போரிடும் குழுக்களுக்கு எதிராக இப்பகுதியில் இஸ்லாமியப்படை நிறுத்தப்படவேண்டும்.

ஈராக்கிற்கு எதிரான பொரு




## ஐ. நா. சபையின் தரத்தை அமெரிக்காகுறைத்துவிட்டது

**- அனுரா பண்டாரநாயக்கா**

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் தரத்தை அமெரிக்கா குறைத்துவிட்டது என்று கடந்த வியாழனன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம் பி அனுரா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் கூறினார்.

பாரசீக வளைகுடா நெருக்கடியில் ஆயுத பலத்தைப் பிரயோகிப்பதற்காக ஐ நா விடம் அனுமதி பெற்றுக் கொண்ட அமெரிக்காவும் அதன் நேசதேசங்களும் ஈராக்குக்கு எதிராகப் போரை நடத்துகின்றன. ஐ நா உலக நெருக்கடியில் எப்போதும் ஒரு நடுநிலைமையான பங்கை வகிக்க வேண்டும்.

இவ்வாறு அனுரா மேலும் பேசும் போது தெரிவித்தார்.

விமானக்

கொண்டு செல்லப்பட்டனர்.

**நீர்வேலியில்**

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சினால், தொழிற்சாலைக்குப் பாரிய சேதமேற்பட்டது. அடுத்த குண்டொன்று அப் பகுதி ஆசிரியரொருவரின் வீட்டில் விழுந்ததால் அவ் வீடும் சேதமடைந்தது. கண்ணாடித் தொழிற்சாலையில் சம்பவநேரம் பத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்துகொண்டிருந்ததாகவும், அவர்கள் அச் சமயம் பாதுகாப்பைத் தேடிக் கொண்டதால் காயமெதுவுமின்றித் தப்பிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஹெலி தாக்கு

பளைப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம்நோக்கிச்சென்ற கார் ஒன்று ஹெலிகொப்டரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி பலத்தசேதமடைந்தது. நேற்று முன்தினம் பிற்பகல் மிருசுவிலுக்கும், எழுதுமட்டுவாளுக்குமிடையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. காரில் இருந்தவர்கள் இறங்கி பாதுகாப்பைத் தேடிக்கொண்டதால் காயமெதுவுமின்றித் தப்பினர்.

மீப்பு நிதி

கும்.

### மீட்பு நிதி

பட்ட இடங்களில் தமது பங்களிப்பைச் செலுத்தலாம்.

மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் 3 2 91 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கும் நண்பகல் 12.00 மணிக்கும் இடையில் தெல்லிப்பளை ஜெயப்பிரகாச வித்தியாலயத்தில் தொடர்புகொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப்பொறுப்பாளர் செ. தமிழேந்தி கேட்டுள்ளார்.

---

### வளைகுடா

மறுபுறம் ஈராக்கில் இருந்து சவுதி அரேபியா எகிப்து வரைக்கும் பருவமழை உட்பட அடுத்தடுத்த பல்வேறு வானிலைப் பருவங்களும் மோசமாகவே பாதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தத் தாக்குதலினால் ஈரானின் தென் பகுதிகளில் அடர்த்தியான கரும்புகை சூழ்ந்திருப்பதாகவும் அந்தப்புகை மேகத்திரள் சீராக தொடர்ந்து கிழக்கு நோக்கி நகர்வதாகவும் ஈரானிய செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. இத்துடன் இப்பகுதியில் கரிய நிற மழை பெய்வதாகவும் இந்த கருமழை நீரால் குடிநீர் தூய்மை பாதிப்படையும் என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எண்ணெய்க் கசிவுகளின் அளவு 6 கோடி 40 இலட்சம் பீப்பாய் அளவிற்கு இருக்கும் என சுற்றுச் சூழல் வல்லுநர் ஒருவரின் கணிப்பீடு தெரிவிக்கின்றது.

---

மாறு;

உடனடியாகப் போர்நிறுத்தம் செய்யப்படவேண்டும் வளைகுடா பிராந்தியத்திலி டும்.

ஈராக்கிற்கு எதிரான பொருளாதாரத்தடை நீக்கப்பட வேண்டும்.

# ஈராக்கை பாதிக்கவுள்ள கதிரியக்கத் தாக்கம்

ஈராக்கின் அணு உற்பத்தி உலையை அமெரிக்கா தாக்கி நாசம் செய்துள்ளமையானது பல புதிய தாக்கங்களை எதிர்காலத்தில் கொண்டு வருமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஈராக்கில் இருந்த ஒரே ஒரு அணு உற்பத்தி உலையை அமெரிக்க விமானப் படை தாக்கி நாசம் செய்திருந்தமை வாசகர் அறிந்ததே.

இந்த அணு உலை இருந்த பிரதேசம் முழுவதும் பாழ்படுத்தப்பட்டு விட்டதாகவும் இதனால் ஏற்பட உள்ள கதிரியக்கத் தாக்கம் எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் ஜீவராசிகளையும் மனிதஉயிர்களையும் பெரிதும் பாதிக்கும் எனவும் விஞ்ஞானிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கிடம் ஓர் அணுகுண்டை மட்டும் தயாரிக்கக் கூடிய அளவு யுரேனியம் கையிருப்பில் இருந்த வேளையில் இந்த அழிப்பு வேலையை நாம் மேற்கொண்டதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

ஈராக்கிடம் இருந்த இரண்டு அணு உற்பத்தி உலைகளை 1980ஆம் ஆண்டு இஸ்ரவேல் குண்டு வீசி அழித்திருந்தமை தெரிந்ததே ஆனால் அப்போது அந்த அணு உலைகளில் கதிரியக்க சக்திகள் இருக்கவில்லை.

---

### புதிய

போது அங்குள்ள நிலைமையை நாம் முற்றிலுமாக நன்கு உணர்ந்திருக்கிறோம் என்றார் அங்கு நடந்திருக்கும் சிங்களத் தொடர்பான சம்பவங்கள் எல்லாமே பெரிதும் வேதனை தந்துள்ள பேரதிர்ச்சிகளாகும் என்றார் அவர் எனவே இந்தப் பிரச்சினை சாத்தியமான முறையிலேயே தீர்க்கப்பட வேண்டும் என்றும் வெளியுறவு அமைச்சர் வி.சி. சுக்ளா தெரிவித்தார்.

---

### விமானத் தாக்குதலினால்

கொண்டதில் வே. மகேஸ் (30) என்பவர் பலியானார்.

மைக்கல், வேலு ஆகியோர் படுகாயமடைந்தனர். தேவன் கத்தோலிக்க பாடசாலையின் மூன்று கட்டடங்களும், மாவட்டக் கூட்டுறவுச் செயலகம், ஆட்காட்டி வெளியைச் சேர்ந்த பண்டகசாலை, கிராம அபிவிருத்திக் கட்டடம் என்பனவும் பலத்த சேதமடைந்தன (மூ-

---

### இன்று

களை இன்று காலை 10.00 மணிக்கு வங்கி அலுவலகத்துக்கு சமுகமளிக்குமபடி இவ் வங்கியின் பிரதான முகாமையாளர் கேட்டுள்ளார்.

---

கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### உடுப்பிட்டி

உடுப்பிட்டிப் பகுதியில் நேற்று 3 மணியளவில் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு தனியார் கல்வி நிலையம் பலத்த சேதமடைந்தது. இத் தாக்குதல் நடைபெற்ற நேரம் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் வகுப்பறைகளை விட்டு வெளியேறி பாதுகாப்பைத் தேடிக்கொண்டதால் காயமோ, உயிர்ச்சேதங்களோ ஏற்படவில்லை. மாணவர்களின் சைக்கிள்கள் பல சேதமடைந்தன. மேலும் இரு வீடுகள் சேதமடைந்தன.

வல்வெட்டித்துறை ஊரிக்காடுப் பகுதியிலும் 3 போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டிருந்தன. இத் தாக்குதலின்போது வெடிக்காத நிலையிலிருந்த குண்டொன்றும் போராளிகளினால் மீட்கப்பட்டது.

கோண்டாவில் பகுதியில் மாலை 4 00 மணியளவிலும் 5.00 மணியளவிலும் இரு தடவைகள் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன இத் தாக்குதலின்போது மூவர் ஸ்தலத்திலேயே பலியாயினர் குஞ்சன் (வயது 39) அப்பன் (வயது 18), ராசம் (வயது 62) ஆகியோரே பலியானவர்களாவர். மேலும் சஜீவன் (வயது 23), தியாகராசா (வயது 41), புஸ்பராசா (வயது 25), சதீஸ் (வயது 21) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை நேற்று காலை 7 30 மணியளவில் சாவகச்சேரிப் பகுதியில் வட்டமிட்ட ஹெலிகொப்டர் ஒன்று நகர் மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது. (லோ. க. ச. செ, த, மை, 85)

---

பாதுகாப்பைத் தேடிக்கொண்டதால் காயமெதுவுமின்றித் தப்பினர். (செ. த. மை.)

---

### சுக்ளாவை

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. மேலும், வர்த்தகம், முதலீடு பற்றிப் பேசுவதோடு வளைகுடா யுத்தம் தொடர்பாக அணிசேரா மாநாட்டை உடனடியாகக் கூட்ட வேண்டும்' என்ற ஜனாதிபதியின் கோரிக்கை பற்றியும் ஆராயப்படவுள்ளது எனகொழும்பு வானொலி அறிவித்தது.

மேலும் அவ்வானொலி மன்னார்ப்பகுதியில் எண்ணெய் பெறுவது பற்றிய இலங்கை-இந்திய கூட்டு முயற்சிகள் பற்றியும் இரு அமைச்சர்களும் ஆராய உள்ளனர் எனவும் தெரிவித்தது.

இதன் பின்னர் ஜனாதிபதியைச் சந்திக்கும் அமைச்சர் சுக்ளா இலங்கை இனப்பிரச்சினை, வளைகுடாயுத்தத்தை நிறுத்துவதற்கு அணிசேரா நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகள் மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்தாலோசிக்க உள்ளாராம்.

அமைச்சர்களான ஏ.சி.எஸ். ஹமீது, தொண்டமான், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவையும் இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்ளா சந்தித்துப்பேசவுள்ளார்.

### அதிகாரிகள்

மேலும் அந்த அறிக்கையில் தமிழ்மாணவர் நலனில் அக்கறை கொள்ளாது வடக்குக் கிழக்கிற்கு அப்பால் ஓடிச் சென்ற கல்வித்திணைக்கள அதிகாரிகள், நிர்வாகிகள் சம்பளத்தின்று மாத்திரம் கல்வித் திணைக்களத்திற்கு சமுகம் தந்ததற்கும் அந்த அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது